**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL</u>**

## DEPOSITION OF WITNESS

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

**<u>C.C.No. 276/2022 P.W. 2/L.W.8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ரதீஸ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ.சுகுமாரன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 27.04.2026.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். குற்றசுமத்தப்பட்ட நபர்களை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை நான் எப்போது போட்டு கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154–ன் கீழ் அனுமதிக்கிறது.**

**<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. கடந்த 30.07.2018 அதிகாலை 00.20 மணியளவில் போலீசார் குற்றம்சுமத்தப்பட்ட நபர்களை கைது செய்து விசாரணை செய்தபோது அவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் சுபாஷ் என்பவர் முன்னிலையும் பதிவு செய்தார்கள் என்றும் அதன் அடிப்படையில் அத்தாட்சி தயார் செய்தார்கள் என்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலும் நாங்கள்

கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.276/2022, P.W.3/Additional Witness**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கார்த்தீபன் (தலைமை காவலர்) | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 27.04.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது இரணியல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ராமநாதன் மற்றும் உதவி ஆய்வாளர்கள் பிச்சை, சுந்தரதாசன் மற்றம் ஆய்வாளர் முத்துராஜ் ஆகியோர்களை நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 01.02.2018 ம் தேதி காலை 10.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ராமநாதன் நிலையப்பொறுப்பில் இருந்த போது ஜெகன்தாஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 46/2018 சட்டப்பிரிவுகள் 457, 380 இ.த.ச 1860ன் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 01.02.2018ம் தேதி காலை 11.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார்.

4. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கைப்பதிவுச் செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். குற்றம் சுமத்தப்பட்ட

நபர்களை ஆய்வாளர் முத்துராஜ் கைது செய்து 30.07.2018ம் தேதி 00.20 மணியளவில் அவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்து வழக்கின் தடையப்பொருட்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி உள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5. அதற்கான அத்தாட்சி **அ.சா.ஆ. 6. படிவம் 91 அ.சா.ஆ. 7 ஆகவும் அதில் உள்ள தடய பொருள் அ.சா.ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கினை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் சுந்தரதாசன் அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளார். இவ்வழக்கினை அவர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரத்துள்ளார்.

5. இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>குறுக்கு விசாரணை</u> :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.
குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.